## மெட்ரோ ரயில் நிலையத்தில்

# இரண்டு அடுக்கு பார்க்கிங்

ஆலந்தூர், ஜன.3: மீனம்பாக்கம் மெட்ரோ ரயில் நிலையத்தில் பயணிகளின் வசதிக்காக இரண்டு அடுக்கு இருசக்கர வாகன நிறுத்த வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மெட்ரோ ரயில் நிர்வாகம் பயணிகள் வசதிக்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன்படி, மீனம்பாக்கம் மெட்ரோ ரயில் நிலையத்தில் இரண்டு அடுக்கு இருசக்கர வாகன நிறுத்த வசதி நேற்று முதல் தொடங்கப்பட்டது. மெட்ரோ ரயில் நிறுவன இயக்குனர் (இயக்கம் மற்றும் அமைப்புகள்) எல். நரசிம்ம பிரசாத் இதை தொடங்கி வைத்தார்.

இதன்மூலம், தரைதளத்தில் 5 இருசக்கர வாகனங்களும், தரையில் இருந்து 9 அடி உயரத்தில் 5 இருசக்கர வாகனங்களும் என மொத்தம் 10 இருசக்கர வாகனங்களை நிறுத்த முடியும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தற்போது அமைக்கப்பட்டுள்ள இருசக்கர வாகன நிறுத்தமானது ஹைட்ராலிக் முறையில் வாகனங்களை மேலே கொண்டு செல்லும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து இந்த திட்டத்தை மேலும் பல மெட்ரோ ரயில் நிலையங்களில் செயல்படுத்தவும் நிர்வாகம் திட்டமிட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.